விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண். 46 / ஆ2 / 2013 நாள். 08 .01. 2013**

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி–01.01.2013அன்றைய நிலவரப்படி அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் (தமிழாசிரியர் உட்பட) மற்றும் சிறுபான்மைபாட / மொழி ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள்,உடற்கல்விஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பட்டியல் தயாரித்தல்–விவரங்கள் கோருதல் சார்பாக.

பார்வை: 1) சென்னை 6 பள்ளிக்கல்விஇணைஇயக்குநர்(ப.தொ)அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.97703/சி5 / இ1 /2012 நாள்.27.12.2012

2) இவ்வலுவக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.04.1.2013(மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது)

–0–

பார்வையில் காணும் கடிதத்தில் 01.01.2013 அன்றைய நிலவரப்படி அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் (தமிழாசிரியர் உட்பட) மற்றும் சிறுபான்மை பாட / மொழி ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பட்டியல் தயாரித்து அனுப்பக் கோரப்பட்டது. இச்செயல்முறைகளில் பக்கம் ஒன்றில் மூன்றாவது பத்தில் ‘‘தமிழாசிரியர் பதவி உயர்வுக்கு 31.12.1998 முடியவும், இதர பாட பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு 31.12.2012 முடியவும்’’ என்று உள்ளதை ‘‘**தமிழ் உட்பட அனைத்து பாட பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு 31.12.2012 முடியவும்’’** என்று திருத்தி வாசிக்கவும்.

ஒம்/–க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
விழுப்புரம்

பெறுநர்

அனைத்து அரசு/நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண். 46 / ஆ2 / 2013 நாள். 04 .01. 2013**

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி–01.01.2013அன்றைய நிலவரப்படி அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் (தமிழாசிரியர் உட்பட) மற்றும் சிறுபான்மைபாட / மொழி ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள்,உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பட்டியல் தயாரித்தல்–விவரங்கள் கோருதல் சார்பாக.

பார்வை: சென்னை 6 பள்ளிக்கல்விஇணைஇயக்குநர்(ப.தொ)அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.97703/சி5 / இ1 /2012 நாள்.27.12.2012

–0–

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகளின்படி அரசு மற்றும் நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களில் 01.01.2013 அன்றைய நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்கள் (தமிழாசிரியர் உட்பட) மற்றும் சிறுபான்மைபாட / மொழி ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்தோர் பட்டியல் தயார் செய்து அனுப்பிவைக்குமாறு அனைத்துவகை அரசு / நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறுபான்மைபாட / மொழி ஆசிரியர் காலிப் பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்யும் பொருட்டு, பட்டதாரி ஆசிரியராக (தமிழாசிரியர்கள் உட்பட) பதவி உயர்வு வழங்க தகுதிபெற்று அனைத்து அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விவரங்களை (நகராட்சிப் பள்ளிகளில் 01.06.86க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்டவர்கள் நீங்கலாக) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (கலம் 1 முதல் 22 முடிய) பாடவாரியாக, மொழி வாரியாக தனித்தனியாக தொகுத்து உரிய ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து தொகுத்து **தலைமை ஆசிரியரின் மேலொப்பத்துடன் 22 .01. 2013 அன்று இவ்வலுவலகத்தில் இரு நகல்களில் ஆ2 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்துவகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

1) தமிழ், ஆங்கிலம்,கணிதம்,அறிவியல்,வரலாறு,புவியியல் : **தகுதியானவர்கள் அனைவரும் (31.12.2012 முடிய நியமனம் செய்யப்பட்டவர்கள் அனைவரும்)**

தகுதி பெற்ற ஆசிரியர்களின் விவரங்களைப் அனுப்புகையில் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனத்தில் கொண்டு பட்டியல் தயார் செய்யும்படி அனைத்து தலைமை ஆசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) பட்டியலில் இடம் பெறும் ஆசிரியர்கள் 31–12–2012 அன்று குறிப்பிட்ட பாடத்தில் இளங்கலைப் பட்டச்சான்றும், பி.எட்., பட்டச்சான்றும், (குறைந்த பட்சம் Provisional Certificate – ஆவது) வைத்திருக்க வேண்டும்.
2) வெளி மாநில சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3) பட்டியலில் இடம் பெறும் ஆசிரியர்கள் இடைநிலைக்கல்வி(SSLC) தேர்ச்சி பெற்று, மேல்நிலைக்கல்வி (+2) தேர்ச்சி பெற்று பின்னர் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெறாதவர்களை எக்காரணம் கொண்டும் பட்டியலில் சேர்க்கக்கூடாது. தற்போது கடைசியாக பெறப்பட்டுள்ள அரசாணை எண் 242 உயர்கல்வித் (பி1) துறை நாள் 18-12-2012 ன்படி, பதினோராம் வகுப்பு (OLD SSLC) பின்பு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட இரண்டாண்டு ஆசிரியர் பட்டயப்படிப்பு, பிறகு தொலைதூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை (Open University) பட்டப்படிப்பு (11+2+3) படித்தவர்களை 10+2+3 க்கு இணையாகக் கருதி பதவி உயர்வு பெற அங்கீரித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் அவர்களை முன்னுரிமைப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

4) 01–01–2010 அல்லது அதற்குப் பின் பட்டதாரி ஆசிரியர் (தமிழாசிரியர்கள் உட்பட) மற்றும் சிறுபான்மைபாட / மொழி ஆசிரியர் பதவி உயர்வினை தற்காலிகத் துறப்பு செய்தவர்கள் மற்றும் ஏற்கனவே பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறுபான்மை மொழியாசிரியர் பதவி உயர்வினை நிரந்தரத் துறப்பு செய்தவர்களின் பெயர்கள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் இடம் பெறக் கூடாது.

5) ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 1995–ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கும்போது அவர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் (வருடம் மற்றும் ரேங்க் எண்) தவறாமல் குறிப்பிட வேண்டும். (நியமன ஆணையின் நகல், படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

6) ஆசிரியர்களின் பிறந்த தேதி, நியமன முறை, கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிருப்பின் அதன் விவரம், போன்றவற்றை உறுதி செய்து சரியாக அளிக்க வேண்டும்.

7) நகராட்சிப் பள்ளிகளில் 01–06–1986க்கு முன்னர் நகராட்சி ஆணையரால் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்களின் பெயர்கள் பட்டியலில் இடம் பெறுதல் கூடாது.

8) சிறுபான்மை மொழியில் (தெலுங்கு, கன்னடம், மலையாளம், மற்றும் உருது) இளங்கலைப் பட்டம் பெற்றிருப்பின் அத்தகைய ஆசிரியர்கள் அனைவரின் விவரங்களும் பாடவாரியாக / மொழி வாரியாக தனித்தனியே பட்டியலிட்டு அனுப்ப வேண்டும். (மேற்படி ஆசிரியர்கள் தமிழ் மொழித் தேர்வு பகுதி–1 தேர்ச்சி பெற்ற விவரங்களுடன் கருத்துருக்கள் அனுப்பப்பட வேண்டும்).

9) தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டு பின்னர் 01–09–1992 / 01–06–2006ல் முறையான ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்பட்ட ஆசிரியர்களது முதன்முதலில் நியமனம் செய்யப்பட்ட நாள் கலம் எண். 3–ல் பணிப்பதிவேட்டை சரி பார்த்து பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

10) சென்னை உயர்நீதிமன்றத்தின் 14–08–2012 நாளிட்ட தீர்ப்பாணைப்படி ஓராண்டு முறையில் இரட்டைப்பட்டம் பெற்றவர்கள் 01–01–2012ம் ஆண்டுக்கான முன்னுரிமைப் பட்டியலில் இருந்து நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டதால் தற்போது 01–01–2013ம் ஆண்டுக்கான முன்னுரிமைப்பட்டியலில் அவ்வாறு பயின்றவர்களின் விவரங்கள் இடம் பெறக்கூடாது.

மேலும் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் சார்பாக கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களை முதன்மைக்கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் சார்ந்த ஆசிரியரின் விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் என தெரிவிக்கலாம்.

அ. இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகல்.

ஆ. இடைநிலை, உடற்கல்வி / சிறப்பாசிரியர்கள் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணையின் நகல்.

இ. தமிழ்மொழித் தேர்வு தேர்ச்சி பெற்றமைக்கான சான்றின் நகல்.

ஈ. பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சான்றுகளின் நகல்கள்.

உ. வேறு மாநில பட்டம் / பட்டயச்சான்றாக இருப்பின் அதை மதிப்பீடு செய்யப்பட்ட (Evaluation) சான்றின் நகல்.

தலைமை ஆசிரியர்கள் மூலம் பெறப்படும் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மட்டுமே முன்னுரிமைப்படி பரிசீலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பாட பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறுவார்களாதலின், இப்பொருளில் தனிப்பட்ட கவனத்தை செலுத்தி, மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி ஆசிரியர்களின் விவரப் **பட்டியலை இரு பிரதிகளில் 22. 01. 2013 அன்று முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஆ2 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு** மீளவும் அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இணைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள தமிழ் வழி படிவத்தில் மட்டுமே ( 1 – 22 கலங்கள்) தொகுப்பு பட்டியலை பாடவாரியாக (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் வரலாறு, புவியியல்) மொழிவாரியாக (தெலுங்கு, மலையாளம், உருது, கன்னடம்) தனித்தனியாக தயார் செய்து தலைமை ஆசிரியரின் மேலொப்பமிட்டு உரிய அலுவலரிடம் நேரில் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி தெரிவிக்கப்படுகிறது. பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த எந்த ஒரு ஆசிரியர் பெயரும் விடுபடவில்லை என சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியரிடமிருந்து சான்றளிக்கப்படுவதுடன் **பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு எவரும் தகுதி இல்லை எனில் கண்டிப்பாக இன்மை அறிக்கையினை (பாடவாரியாக அதாவது தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் மற்றும் புவியியல்) தவறாமல் பணிந்தனுப்புமாறும் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

ஒம்/–க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
விழுப்புரம்

இணைப்பு: படிவம்

பெறுநர்

அனைத்து அரசு/நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

# பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியல்

01) ஆசிரியர் பெயர்/பதவி/பள்ளியின் பெயர் :

02) பிறந்த தேதி :

03) முதன் முதலில் அரசுப் பணியில் சேர்ந்த நாள் :
(இடைநிலை/உடற்கல்வி/சிறப்பாசிரியர்)

04) ஆசிரியர்தேர்வுவாரியத்தால் நியமிக்கப்பட்டவர் :
எனில் தேர்வு வாரிய தர எண் மற்றும் ஆண்டு

05) பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் :

06) தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள்

07) அலகுவிட்டு அலகு/துறை மாறுதல் மூலம் பள்ளிக் கல்வித் :
துறையில் ஆசிரியராக பணியேற்ற நாள்

08) 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதம் / ஆண்டு :

09) 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதம் / ஆண்டு :

10) பொதுக் கல்வித்தகுதி
அ) முதன்மைப் பாடம் (பி.எ., பி.எஸ்ஸி.,பி.லிட்.) :

ஆ) தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் ஆண்டு :

இ) தேர்ச்சி பெற்ற பல்கலைக் கழகத்தின் பெயர் :

11) தொழிற்கல்வித்தகுதி (பி.எட்.,)
அ) தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் ஆண்டு :

ஆ) தேர்ச்சி பெற்ற பல்கலைக் கழகத்தின் பெயர் :

12) ஆசிரியர் வேறு மாநிலத்தில் கல்வி பயின்றவர் எனில் அவருடைய கல்விச் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா ?(ஆம்/இல்லை) :

13) தாய்மொழி :

14) தமிழ் மொழி அல்லாத பிற மொழி தாய் மொழியாக இருப்பின் : தமிழ் மொழித் தேர்வு பகுதி–1 தேர்ச்சி பெற்றவரா ? ஆம் எனில் தேர்ச்சி பெற்ற விவரம்

15) கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றவரா ? : ஆம் எனில் விவரம் தருக

16) ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதா ? : ஆம் எனில் விவரம் தருக

17) பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் தேதி : (இடைநிலை/உடற்கல்வி/சிறப்பாசிரியர்) அலகு விட்டு அலகு / துறை மாறுதலால் வந்தவர் எனில் பள்ளிக் கல்வித்துறையில் பணியில்சேர்ந்த நாள்

18) ஏற்கனவே பதவி உயர்வினை தற்காலிகமாகவோ : அல்லது நிரந்தரமாகவோ துறந்தவரா(தேதிகுறிப்பிடவும்)

**<u>சான்று</u>**

கலம் 1 முதல் 18 முடிய உள்ள விவரங்களைப் பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து சரியாக உள்ளதெனச் சான்றளிக்கிறேன்.

ஆசிரியர் கையொப்பம் தலைமை ஆசிரியர்
கையொப்பம் கையொப்பம்

## *பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்தோர் ஆசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியலுக்கு கீழ்க்காணும் அனைத்து சான்றுகளையும் கண்டிப்பாக தலைமை ஆசிரியரின் மேலொப்பத்துடன் (Attestation) இரு நகல்களில் கருத்துருவுடன் இணைத்தனுப்பப்பட வேண்டும்*

01) இடைநிலை ஆசிரியர் பணிநியமன ஆணை(Appointment Order )

02) பணிவரன்முறை ஆணை (Regularisation Order)

03) முறையான நியமனம் எனில் எந்த தேதியில் பணியில் சேர்ந்தார் என்றமைக்கும் முறையான நியமனம் என பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்கத்தின் நகல் இணைக்கப்படவேண்டும்

04) தகுதிகாண் பருவ ஆணை (Probation order)

05) அலகுவிட்டு அலகு(**Unit Transfer**) / ஈர்த்துக் கொள்ளப்பட்டு(**Absorption**) வந்த ஆசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட (உரிய அலுவலரால் வழங்கப்பட்ட ஆணை நகல்) ஆணையின் நகலினையும் மற்றும் பள்ளிக் கல்வித்துறையில் அதாவது அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளியில் பணியில் சேர்ந்த நாளான பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்கத்தின் நகல் இணைக்கப்படவேண்டும்.

06) எஸ்.எஸ்.எல்.சி (SSLC) மற்றும் மேல்நிலைக் கல்வி (+2)மதிப்பெண் சான்று நகல்கள் கண்டிப்பாக இணைக்கப்படவேண்டும்.

07) ஆசிரியர் கல்வி பட்டயச் சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்
(DTEd Certificate Xerox copy with Attested)

08)

| | |
|---|---|
| B.Sc., (Maths) (Scie) with B.Ed.,<br>B.A.,(Eng.) (His) (Geo.) with B.Ed.,<br>B.A. (Tamil) or B.Lit., or Pandit Course<br>தமிழ்ஆசிரியர்பதவிக்குபி.எட்தேவையில்லை | Degree Certificate (or)<br>Provisional Certificate<br>ஏதாவது ஒன்று<br>இணைக்கவேண்டும். |

09) வேறு மாநிலத்தில் பட்டம் பயின்றவராக இருந்தால் மதிப்பீடு(Evaluation) செய்து இருக்கவேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட ஆணையின் நகல் இணைக்கப்படவேண்டும்.

10) 1995ல் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் கண்டிப்பாக தேர்வு செய்யப்பட்ட ஆண்டு / தரம் எண் குறிப்பிடவேண்டும்.

11) ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், புவியியல் பாடத்தில் தகுதி பெறும் ஆசிரியர்கள் 31.12.2012 அன்று மேற்குறிப்பிட்ட பாடத்தில் இளங்கலைப் பட்டச்சான்றும், பி.எட்., பட்டச்சான்றும் (குறைந்த பட்சம் Provisional Certificate ஆவது வைத்திருக்க வேண்டும்.

12) தமிழ் பாட பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வினை பொறுத்தவரை 31.12.2012க்கு முன்னர் பணிநியமனம் பெற்றிருக்கவேண்டும் 31.12.2012 அன்றைய தேதியில் இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ. (அ) பி.லிட் பாடத்தில் இளங்கலைப் பட்டச்சான்றும் குறைந்த பட்சம் Provisional Certificateஆவது வைத்திருக்க வேண்டும். பி.எட்., பட்டச்சான்று முடித்திருக்கவேண்டும் என்ற கட்டாயம் இனிஆக்கு மட்டும் தேவையில்லை. சிறப்பாசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை பொறுத்தவரை பி.ஏ.(அ) பி.லிட்., மற்றும் பி.எட்., பட்டச்சான்றும் இருக்கவேண்டும்.